VMC
பொதுசன நூலகம் 23-8-1991 யாழ்ப்பாணம்

# உலர் உணவு நிவாரண விநியோக நிறுத்தம் ஜனாதிபதியுடன் 12 அரசியல் கட்சிகள் பேச்சு

முகாம்களுக்கு வெளியே உள்ள அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டது தொடர்பாக பன்னிரண்டு அரசியல் கட்சிகள் ஜனாதிபதி பிரேமதாஸவைச்சந்தித்து பேசியுள்ளன. இது குறித்து புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தினா நிதியமைச்சருடனும், நிதியமைச்சு அதிகாரிகளுடனும் விரைவில் பேச்சு நடாத்தவிருப்பதாக பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். அதன்பின்னர் இதுகுறித்து தீர்மானத்தை அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை நாட்டின் சில பகுதிகளில் முகாம்களில் இல்லாத அகதிகள் முகாம்களுக்குச் செல்வதாகவும் ஆனால் அங்கே பதிவு செய்ய முடியாது எனக் கூறப்பட்டதாகவும் பாராளுமன்றத்தில் புனர்வாழ்வு அமைச்சரிடம் கூறப்பட்டுள்ளது,

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 268 பிரசோற்பத்தி ஆவணி 07 ( 23 - 08 - 1991 ) வெள்ளி

# இலங்கை அரசு உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

## இந்திய வெளியுறவு அமைச்சர் பாராளுமன்றத்தில் வலியுறுத்து

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் தொடர்ந்து போர் நடைபெறுவது குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது இனப் பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கையில் இலங்கை அரசு இறங்கவேண்டும் என இந்தியா வற்புறுத்துகிறது என இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று இந்திய பாராளுமன்றத்தில் உரையாற்றிய இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி, ''இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் தாமாக முன்வந்து இலங்கை திரும்புவதற்கு சரியான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் வற்புறுத்தியுள்ளது என்றார்.

இலங்கைத்தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தியா வற்புறுத்தி வருவதாக குறிப்பிட்ட அமைச்சர் இதற்கு பேச்சுவார்த்தையே முக்கியமானது என இந்தியா இலங்கை அரசிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் கூறினார்.

## அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க

# பேச்சு ஆரம்பிக்கும் எண்ணமில்லை புலிகளே முதலில் பேசவேண்டும்

''விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கும் எண்ணம் அரசிடம் இல்லை. பேச்சுவார்த்தை நடாத்தவேண்டுமானால் புலிகளே முதலில் அதற்கான சமிக்கையைக் காட்ட வேண்டும்'' என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரணில், பேச்சு வார்த்தை ஆரம்பிக்க அரசு முன்னர் விதித்த நிபந்தனையில் எவ்வித மாற்றமில்லை. புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும், ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் புலிகள் பேசவேண்டும் என்பதே அரசின் நிபந்தனைகளாகும் என்றார்

செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இராணுவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிரிகேடியர் விஜய் விமலரட்ன

# தரமான ஒரு படையுடன் ஆனையிறவில் மோதினோம்!

''நாம் தரமான பலம் பொருந்திய ஓர் எதிரிப்படையுடனேயே யுத்தம்புரிந்தோம்' என ஆனையிறவு யுத்தம் குறித்து ஆனையிறவு முகாமில் ஞாயிறன்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய பிரிகேடியர் விஜய் விமலரட்ன தெரிவித்தார்.

புலிகள் மிக நன்றாகவே போரிட்டனர், நாமும் நன்கு போரிட்டோம். எம்மிடம் போதியளவு படைகள் இருந்

—04 ஆம் பக்கம் பார்க்க

# அம்பாறை தாக்கு 12 படையினர் பலி

நேற்றுமுன்தினம் அம்பாறையில் நடைபெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் 12 படையினர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் பயணம் செய்த உழவு இயந்திரமும் சேதமாக்கப்பட்டது.

# ஆனையிறவு கடல்நீரேரியில் கடல் வற்றுப் பெருக்கு !

ஆனையிறவு கட நீரேரிப் பகுதியில் தற்போது கடல் வற்றுப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆனையிறவு முகாமிற்கு வடகிழக்காக உள்ள பகுதிகளில் நீர்மட்டம் உயர்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இதன் காரணமாக முகாமிற்கான வெற்றிலைக்கேணியிலிருந்தான விநியோகப் பாதை முற்றாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

புலிகளின் தொடர்ச்சியான

—04 ஆம் பக்கம் பார்க்க

# பொன்னாலை உற்சவத்தில் இம்முறை பக்தர்கள் குறைவு

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த உற்சவத்தின் போது கரைநகரில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளாதிருக்க ஆலய பரிபாலன சபையினர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கடற்படை படகுகளின் நடமாட்டம் திருவடிநிலைப் பகுதியில் அதிகரித்துள்ளதாலும், காரைநகரில் இருந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

# கணிதபாட சித்தி அவசியமில்லை ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கு

கஷ்டப் பிரதேசங்களுக்கான ஆங்கில ஆசிரியர் தெரிவில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆங்கில ஆசிரியர்கள் தெரிவின் போது கணிதம், வர்தக பாடங்களில் சித்தி இருக்க வேண்டும்என்றநடைமுறையே நீக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் திறமையான

—04 ஆம் பக்கம் பார்க்க

# ஆங்கில ஆசிரியர் பரீட்சை அனுமதி அட்டை வரவில்லை

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் இன்னும் யாழ் மாவட்டத்திற்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லையென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது

இதேவேளை பரீட்சைத் திணைக்களம் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகளை அனுப்பி வைக்கப்படுமென முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இப் பரீட்சை திட்டமிட்ட

—04 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியாவே நீ என்ன செய்கிறாய்?

— வாகரைவாணன் —

இந்தியாவே,
நீ
என்ன செய்கிறாய்?
உனது
முகத்தில்
எழுதியிருந்த
முந்தைய
பெருமையெல்லாம்
நீ
தளர்ந்து போன
காரணத்தினால்
தாமாகவே
மறைந்து விட்டனவா?

உன்னுள்ளே
ஊடுருவிப் பரந்திருக்கும்
உபநிடதங்களும்
வேதங்களும் தானே
உனது
ஆத்மா!

அந்த
ஆத்மா
இப்போது
அந்தரித்துக்
கொண்டிருக்கிறதா
என்ன?

கங்கை
எங்கள்
கண்ணில் அல்லவா
வழிகின்றது!

காசிப்பூர்ச்
சுடு காடாக
எங்கள் தேசம்
மாறிக் கொண்டிருப்பதை
நீ
கவனிக்க வில்லையா?

பல நாடுகளைக்
கொண்டது தானே
பாரதம்?
இந்தப் பழைய
வரலாறு
மின்னல்
வேகத்தில்
மீண்டும்
உருவாகிக்
கொண்டிருப்பதை
நீ
காணவில்லையா?

புத்தர் பிறந்த பூமி
மகாவீரர்
நடந்த மண்
முனிவர்களும்
ஞானிகளும்
முடி சூடி
வாழ்ந்த நாடு

இப்படியெலாம்
எழுதியும் பேசியும்
எனக்கு
நிகர் இல்லை
என்று
இறுமாந்தாயே
இன்று
என்ன நடக்கின்றது?

ஈழத் தமிழர்கள்
எங்கள்
இரத்தம், சதை, எலும்பு...
ஆலமரம் நான்
அவர்கள்
விழுதுகள்
என்று
அணைத்த நீ
இப்போது
அறுத்தா எறிகின்றாய்?

உன் பாதத்தின் கீழ்
ஈழம் இருக்கிறது
என்னும்
உதாசீனமா?

புறாவுக்குக் கூட
உன் புதல்வன் ஒருவன்
இரங்கினான்
என்பதெலாம்
வெறும்
புளுகுதானா?

சொன்ன சொல்லைக்
காப்பதற்காக
சூரிய குல அரசன் ஒருவன்
சுடலை காத்தான்
என்று
சொன்னதெல்லாம்
சுவையான கதைதானா?

விஷ்ணு
உன் மண்ணில் தானே
வித விதமான
அவதாரங்களை யெல்லாம்
எடுத்தான்?

அரக்கனை வதம் செய்ய
அயோத்தி ராமன் -
துரியோதனனுக்கு ஒரு
துவாரகைக் கண்ணன்...

இந்தியாவே!
அயோத்தி ராமனாக
நீ ஆயுதம்
ஏந்த வேண்டாம்
ஆனால் -
பார்த்தசாரதியின்
பாத்திரம் கூடவா
வகிக்கக் கூடாது?

இல்லையென்றால்
இந்தக் கதையெல்லாம்
இனி எங்கே
எடுபடப் போகின்றது?

ஆலவாய் அழகன்
தனது
அறுபத்து நான்கு
திருவிளையாடல்களையும்
உன்
தேசத்தில் தானே
நடத்திக் காட்டினான்!

மூதாட்டி
ஒருத்திக்காக
முக்கண்ணன் அவன்
முதுகில்
அடி வாங்கினான் -
ஆனால் நீ...
முப்பத்தைந்து லட்சம்
ஈழத் தமிழரின்
முதுகில் குத்தியிருக்கின்றாயே
முறையா இது?

சத்தியசாயி பாபாக்களும்
சங்கராச்சாரியார்களும்
சஞ்சாரம் செய்யும்
உன்
பூமியில் தானே -
'அமிதாப் பச்சன்' களையும்
லலிதாக்களையும்
அரியணையில் ஏற்றி
ஆலவட்டம்
வீசுகிறாய்
அடுக்குமா இது?

நீ
தலை கீழாய்
மாறி விட்டாய்
என்பதைத் தானே
தமிழ் நாடு
எடுத்துச்சொல்கிறது?

நாற்பதாண்டு காலமாக
நாங்கள்
நாயாகஅலைகின்றோமே
நீ
'நடுவர்' ஆசனத்தில்
கூட
அமரக்கூடாதா?

தென்னாபிரிக்கக்
கறுப்பருக்காகத்
தினம் தினம்
அறிக்கை விடுக்கின்றாய்.
அரபாத்தை
அணைக்கின்றாய்-
அங்கோலாவுக்குச்
செங்கோல்
பிடிக்கின்றாய்-
ஆனால்— ஈழத் தமிழர்
'ஷெல்' அடியிலும்
குண்டு வீச்சிலும்
சிக்கி
கின்னா பின்னமாவதை
சீரணித்துக்
கொண்டிருக்கும்
நீ ..
சீ, என்ன
சென்மம்!

அமைதிப்படையை
அனுப்பினேன்
என்கிறாயா?
அவர்கள் என்ன
செய்தார்கள்?
'அன்பு வழி'யில்
நடந்தார்களா?
'நேசக்கரம்'
நீட்டினார்களா?
இல்லையே!
காக்கை குருவிகள் போல
எங்கள் மக்களைச்
சுட்டு வீழ்த்திவிட்டு
தெருவில்
காட்சிக்கு வைத்தார்கள்.

பொற் கோயில்களாக
எங்கள்
புனித தலங்களையும்
கருதி
ஷெல் அடித்தார்கள்,
சேவல் பிடித்தார்கள்

இவற்றை யெல்லாம்
மறந்து விட்டு

வளர்த்தகடா
மார்பில் பாய்கின்றது
என்று
வார்த்தை அளக்கின்றாய்-

வாஸ்தவந் தான்

கறிக்கு வளர்த்த கடா
கை நழுவிப் போய்விட்டது
என்னும்
கவலை இல்லாமல்
இருக்குமா உனக்கு?

இந்தியாவே!
தென் கிழக்காசியாவில்
நீ ஒரு
அமெரிக்கா ஆகப்
பார்கின்றாய்

அதற்காக
நீ எதையும்
செய்யத் தயார்

இது தானே
உன்
இன்றைய
வெளி நாட்டுக்
கொள்கை?

கருணாநிதி அரசில்
புலிகளின்
கை யோங்கி விட்டது
என்ப தொல்லாம்
நீ விட்ட
புதுக் கரடி.

ராஜீவ் ஊடாக
நீ கண்டு பிடித்த
ராஜ தந்திரங்களில்
இதுவும் ஒன்று

புலி வருகின்றது
புலி வருகின்றது
என்று
யாரோ ஒருவன்
பூச்சாண்டி
காட்டினானாம்
ஆனால்-
உண்மையில்
புலியே
வந்து விட்டதாம்.
புரிகின்றதா?

## தவமென்ன செய்தேனோ நல்லை முருகா!

ராகம்;- தேஷ் தாளம்;- ஆதி

பல்லவி

தவமென்ன செய்தேனோ நல்லைமுருகா—வெல்லும்
தமிழினில் உனைப்பாட நல்லைக்குமரா—கந்தா
(தவ...)

அனுபல்லவி

தவமேதும் புரியாத அறிவிலிநான்—வாழும்
தமிழேதும் படியாத அறிவிலிநான்—சூழும் (தவ...)

சரணம்

அறியாவென் அகம்நாடி நீயமர்ந்தாய்—என்றும்
அறியாநல் லறிவெல்லாம் நீயளித்தாய்—அந்த
அறிவாலுன் புகழ்பாட நீபணித்தாய்—ஏதும்
அறியாவென் புகழ்ப்பாட்டில் நீநிறைந்தாய்—முருகா!
(தவ...)

— ச. முருகையா

## பரீட்சை

'Tacep' (ஆங்கில) நெறிக்கான இறுதிப்பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என பிரதேச இணைப்பாளர் நா. தேவபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

## ரீ. ஆர். ஓ. இடமாற்றம்

கடந்த மாதம் தாளையடியில் இடம்பெற்ற 'அவ்ரோ' விமானக் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமடைந்த தமிழர் புனர்வாழ்வுக் கழக (ரீ ஆர் ஓ) வடமராட்சி கிழக்குக் கிளை தற்போது பிரதான வீதி, நாகர் கோயில் கரவை என்னும் முகவரியில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கப்படுகிறது

பருத்தித்துறை பெரும்பாக காணிப்பதிவகத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் பிறப்புச் சான்றுப் பத்திரம் வழங்கப்படுகின்றன. (10)


## சிறு விளம்பரம்

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் தானே வெட்டித்தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். 'திருமகள் தையல் நிலையம்'' (கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக)கல்வியங்காடு சந்தைகல்வியங்காடு. 08124

### ஜோதிடம்

(ஆகஸ்ட்)வியாழமாற்றம், செவ்வாய்மாற்றம் ரூ6/50 எங்கும் விற்பனையாகின்றது தங்கம் ஸ்ரோர் ஸ் முத்திரைச்சந்தையடி நல்லூர் :- எழுதியவர்:- பேராசிரியர் சத்திய தாஸன் ஞானம்சித்தன் கேணி. 08128


## போர்க்களம்

வீட்டிற்குள் இருந்து கணேசன் போட்ட சத்தம் கேற்றடிக்குக் கேட்டது. கேற்றைத் திறக்கக் கையெடுத்த சுகன்யா தயக்கத்துடன் ஒரு கணம் நின்றாள். கணேசன் அவள் அக்காவின் கணவன். அடிக்கடி சண்டை நிகழும் வியட்நாம் வீடு. சுகன்யா படிக்கும் கல்லூரிக்கருகில் அக்காவின் வீடு. மத்தியானம் அக்கா வீட்டில்தான் சாப்பாடு.

கணேசன் வெளியே வரும் சத்தம் கேட்டது. சுகன்யா கேற்றைத் திறந்து உள்ளே போனாள். ஒன்றுமே நடக்காததுபோல் அக்கா உணவு பரிமாறினாள். அவளுக்குப் பழகிவிட்டது.ஆனால் முகத்தில் சிந்தனை குடிகொண்டிருந்தது.

'என்னக்கா யோசிக்கிறாய்' என்றாள்.

இந்தப் பத்துவருட மண வாழ்க்கையில் இவர் என்னுடன் சண்டை பிடித்தது கூடவா, சந்தோசமாக இருந்தது கூடவா என எண்ணிப் பார்த்தேன்.

'எது கூட'

'சண்டைதான்கூட'

'உன்னோட சண்டை போடறதுக்குப் பதில் ஆனையிறவிலை போய்ச் சண்டை போடச்சொல்லு'

அக்காவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

'வாயை மூடு,வேணுமெண்டா நீ போவன்' என்றாள்.

அடுத்த நாள் மத்தியானம் சுகன்யா வரவில்லை. நேரம் போய்விட்டது. அக்கா கல்லூரிக்குப் போனாள். அங்கே அவளுக்கொரு கடிதம் காத்திருந்தது.

'அக்கா, நீ சொன்ன இடத்துக்குப் போகிறேன்'
சுகன்யா.

— பாலகுமரன்

# 2ஆம் தவணைமுதல் புதிய ஆசிரியர்களின் சேவை!

# கொத்தணிகளில் கல்விவளர்ச்சிக்கழகங்கள் நியமிக்கும்

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களது திறமை, சேவை மனப்பான்மைகளைக் கருத்திற்கொண்டு வருட முடிவில் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கொத்தணிகள் தோறும் உள்ள கல்வி வளர்ச்சிக் கழகங்களினால் நியமிக்கப்படவுள்ள இந்த ஆசிரியர்களுக்கு இடையிடையே கற்பித்தற் பயிற்சிகளும் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளன.

ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவராவது வெளிநாட்டுக்குச் செல்லாது கஷ்டப்பட்ட குடும்பங்களிலிருந்து திறமை அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படலாமெனச் சொல்லப்படுகிறது. (18)

## இந்தியா ருடே தரும் தகவல்

ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர் என அறிவிக்கப்பட்ட ஒற்றைக்கண் சிவராஜனின் உண்மையான பெயர் ராஜா அருமைநாயகமாம்.

'இந்தியா ருடே' என்ற சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

## ஆங்கிலப் பாடத்திற்கான வினா வங்கிகள் அமைப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கொத்தணி, கோட்டப் பிரிவுகள் தோறும் ஆங்கில பாடத்திற்கான வினா வங்கிகளை அமைப்பதற்கான துரித நடவடிக்கைகள் பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வினா வங்கிகளை அமைப்பதற்கான கருத்தரங்குகள் கொத்தணி, கோட்ட ரீதிகளில் நடாத்தப்பட்டு வருகின்றன.

வினா வங்கிகள் மூலம் கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் நன்மையடைவார்கள் எனச் சொல்லப்படுகிறது (18)

## மானி. மகளிர் வருடாந்தக் கூட்டம்

மானிப்பாய் மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 24ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (37)

## கொழும்பில் மலேசிய வங்கி விரைவில் திறக்க முயற்சி

கொழும்பில் மலேசிய வர்த்தக வங்கியொன்றின் கிளையொன்று விரைவில் திறக்கப்படவுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவி நகர வாசிகளுக்கே சந்தர்ப்பம்;

யாழ் போதனா வைத்திய சாலையில் அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் இருந்து 5 மைல் சுற்றாடலுக்குள் வசிப்பவர்களுக்கே இக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (04)

## செஞ்சிலுவை விற்பனை நிலையம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்படும் விற்பனை நிலையமொன்று நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைத் தொண்டர்களினால், உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தும்புத்தடி, விளக்குமாறு, அகப்பை என்பனவற்றுடன் வேறு பொருள்களும் நியாய விலையில் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

நல்லூர்க் கோவில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் விற்பனை நிலையம் திருவிழா முடிவடையும் மட்டும் தொடர்ந்து இயங்கவிருக்கின்றது. (13)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்குழு தலைவராக மங்கள முனசிங்க

இனப்பிரச்சினைத் தீர்வுப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக எதிர்க்கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்படல் வேண்டுமென்ற பிரேரணையை மங்கள முனசிங்கவே முதலில் சமர்ப்பித்திருந்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆய்வரங்கம்

"சர்வதேச அரங்கில் தமிழீழ விடுதலைப் போராட்டம்" என்னும் விடயம் பற்றிய ஆய்வரங்கம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (03)

## விளையாட்டுத்துறை அதிகாரி பதவி; 30-ம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்

விளையாட்டுத்துறை அமைச்சு புதிதாக விளையாட்டு அதிகாரிகள் பலரை நியமிக்கவுள்ளது

போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைகளின் மூலம் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது

விண்ணப்பங்கள் அனைத்தும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## அகதிகளுக்கு உதவி

ஆனைபிறவு, வெற்றிலைக்கேணிப் பகுதி யுத்தங்களால் இடம்பெயர்ந்து வடமராட்சி பகுதிகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக (ரீ. ஆர். ஓ) மருதங்கேணி, பருத்தித்துறை கிளைகள் உலர் உணவுப் பொருள்களுடன் சவர்க்காரம், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களையும் கடந்த வாரம் வழங்கின.

அத்துடன் கடந்த வருடம் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்துவந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கும் சவர்க்காரம், மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன.

ரீ. ஆர். ஓ வடமராட்சி கிளைகளினது மேற்படி உதவிகளினால் கிட்டத்தட்ட 3,000 இடம் பெயர்ந்த குடும்பங்கள் பயன்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது.

## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சமய, பேச்சுப் போட்டிகள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு வருடந்தோறும் யாழ் மாநகராட்சி மன்றத்தினால் நடாத்தப்படும் சைவ சமயப் போட்டிப் பரீட்சை, பண்ணிசைப் போட்டி என்பவற்றோடு இவ்வாண்டு சைவசமயப் பேச்சுப் போட்டி ஒன்றினையும் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சைவசமய அறிவுப் போட்டி செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கும், பண்ணிசைப் போட்டி இம் மாதம் 31ஆம் திகதி முற்பகல் 9மணிக்கும், சமய அறிவுப் பேச்சுப்போட்டி இம் மாதம் 31 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கும் நல்லூர் இந்து மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இது பற்றிய மேலதிக விவரங்களை நல்லூர் ஆலய மேற்கு வீதியிலுள்ள யாழ் மாநகர மன்ற சுகாதார அலுவலகத்தில் பெறலாமென அறிவிக்கப்படுகின்றது.

## மீண்டும் உற்பத்தி

வடக்கில் நிலைமை சீரானதும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தி ஆரம்பிக்கப்படுமெனக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் தலைமை அலுவலகப் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## விலை வீழ்ச்சி

கிளிநொச்சியில் தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

காற்று காரணமாகவே இவ் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

அங்கு ஒரு தேங்காய் ஆறு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ப 6)

## தொலைக்கல்வி தொடர் அமர்வு

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் பங்குபற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தொடர் அமர்வுகள் 26ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை யாழ் மாவட்டத்தின் பத்து நிலையங்களில் இடம்பெறவுள்ளது,

இதில் பங்குபற்றும் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். வேலணைக் கல்வி கோட்டத்தின் பயிற்சிநெறி மண்கும்பான் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

### போர்த்துளி:

### எந்த மலர்?

நாங்கள் வேண்டுவது  
எப்போதோ பூக்கும்  
விடுதலைக்  
குறிஞ்சியை அல்ல!  
நித்தம் பூக்கும்  
மல்லிகையை -  
நிரந்தர விடுதலையை!

— வாஞ்சிநாதன்

## விவசாயக் குழுக் கூட்டம்

வாராந்த மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (04

## பயிற்சி

கிளிநொச்சியில் ஆரம்பப் பாடசாலை அதிபர்களுக்கும், இடைநிலைப் பாடசாலை பகுதித் தலைவர்களுக்குமான முகாமைத்துவப் பயிற்சி வகுப்புக்கள் இன்று 23ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன.

## மணலாறு கடற்றொழிலாளர்களுக்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் உதவி

மணலாறு மாவட்டத்திலுள்ள செம்மலை, அலம்பில் ஆகிய மீன்பிடிக் கிராமங்களில் ஏறக்குறைய 180 மீன்பிடிக்கும் குடும்பங்கள் பல்வேறுபட்ட கடற்றொழிலைச் செய்துவருகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார எரிபொருள் தடை காரணமாக அம் மீனவர் குடும்பங்களின் தொழில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது, இங்குள்ள குடும்பங்கள் தொடர்ந்தும் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு வசதியாகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டு வருகிறது.

பிடிபடும் மீனைச் சந்தைப்படுத்துவதற்கும் தேவையான வசதிகளும் செய்யப்படுகின்றன. அத்துடன் உப்புத் தட்டுப்பாட்டால் கருவாடு போட்டுச் சேமித்து வைக்கும் நிலை தடைப்படாது பாதுகாத்து வைப்பதற்காக உப்பு தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகிறது உற்பத்தி செய்யப்படும் கருவாடு தேக்க நிலையில் காணப்படும் போது நியாயமான விலைக்கு ஆய்வு நிறுவனமே கொள்வனவு செய்து வன்னிக் கிராமங்கள் போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கிறது.

# சோவியத் சதிப்புரட்சியாளர்கள் கோர்பசேவ் அரசினால் கைது

சோவியத் ஜனாதிபதியாக மீண்டும் கொர்பசேவ் பதவியேற்ற பின்னர் அவரை கவிழ்க்கும் சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் படலம் ஆரம்பமாகியுள்ளது.

சதிப்புரட்சியில் ஈடுபட்டு புதிய அரசு ஒன்றை அமைத்த எண்மர் குழுவில் ஜனாதிபதியாக தன்னைப் பிரகடனப்படுத்திய யெனயேவ் உட்பட எழுபேர் கைது செய்யப்பட்டு விட்டனர். இக்குழுவில் அங்கம் வகித்த உள்துறையமைச்சர் கைது செய்வதிலிருந்து தப்பிக்கொள்ள தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கைதான எழுவர் மீதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்கள் குற்றவாளிகளாக காணப்படின் மரணதண்டனை வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது

இதனிடையே முன்னர் கொர்பசேவுக்கு பொருளாதார உதவி வழங்க மறுத்த ஜப்பான், ஏழு கைத்தொழில் நாடுகள் உட்பட அமெரிக்கா போன்ற நாடுகள் தற்போது ரஷ்யாவிற்கான பொருளாதார உதவி அதிகரிக்கப்படும் என அறிவித்துள்ளன.

தாம் மீண்டும் பதவிக்கு வந்த பின்னர் மொஸ்கோ வானொலியில் உரையாற்றிய ஜனாதிபதி கொர்பசேவ் தன்னை மீண்டும் பதவிக்கு கொண்டுவரப் போராடிய அனைத்து மக்களுக்கும் சோவியத் குடியரசு தலைவர் பொரிஸ் யெல்ஸினுக்கும் தமது மனப்பூர்வமான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொண்டார்.

தமக்கு கடந்த இருதினங்களாக நடைபெற்ற அநீதிகளை இரு தினங்களில் பகிரங்கப்படுத்தப் போவதாகவும் கொர்பசேவ் அப்போது தெரிவித்தார்.

தற்போது சோவியத் யூனியனில் தமக்கு எதிரானவர்களை களை எடுக்கும் முயற்சியில் கொர்பசேவ் அரசு ஈடுபட்டுள்ளது.

## வாழப்பாடி பதவி குறித்து கட்சியினுள் இழுபறி

வாழப்பாடி இராமமூர்த்தியை தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என தமிழக காங்கிரசைச் சேர்ந்த இராஜ்ய சபா உறுப்பினர் திருமதி. ஜெயந்தி நடராஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை புதுடில்லி சென்று திரும்பிய காங்கிரஸ் பிரமுகர் குழுவொன்று வாழப்பாடி தொடர்ந்தும் தமது பதவியில் இருக்கலாம் என கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படை சூடு!

தமிழக மீனவர்களின் படகு மீது ஸ்ரீலங்கா கடற்படைப் படகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் அப்படகில் மீன் பிடிக்கச்சென்ற மூவரில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் என்பவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து தமிழக மீனவர் சங்கம் தமிழக அரசிடம்புகார் செய்துள்ளது

## கைவிடப்பட்ட ஆடுகள் நாய்களுக்கு உணவாகின்றன

வடமராட்சி கிழக்கில் மக்கள் இடம்பெயர்ந்த இடங்களில் உள்ள ஆடுகள் அங்குள்ள நாய்களுக்கு உணவாகின்றனவாம்.

இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தபோது தமது கால்நடைகள், கோழிகள் போன்றவற்றை விட்டுவிட்டுச் சென்றனர்.

பொதுமக்களால் விட்டுச் சென்ற நாய்கள் தமது உணவிற்காக ஆடுகளைத் தின்று வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

சில இடங்களில் இறந்த ஆடுகளின் உருக்குலைந்த உடல்கள் காணப்படுவதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர். 24

## சோனியா காந்தி வெளிநாடு பயணம்!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவிசோனியா காந்தி வெளிநாட்டுப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இவர் எந்நாட்டுக்கு பயணமாகிறார் என்பது குறித்து தெரியவில்லை என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ராஜீவின் மரணத்தின் பின் சோனியா காந்தி வெளிநாடுகளுக்கு செல்வது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சனின் மரணவிசாரணை முடிவடையவில்லை

அமைச்சர் ரஞ்சன் வீஜேயரட்னா மரணம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடிவடையவில்லை என பிரதமர் டி. பி. விஜேயதுங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

சுதந்திரக்கட்சி எம். பியான நிமால் சிறிபால டி சில்வா கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

## ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்குரிய பொதுசன உதவிப்பணம் வழங்க நடவடிக்கை

1991 ஏப்ரல் மாதம் தொடக்கம் ஜுன் மாதம் வரையிலான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுபனவுகள் வழங்கப்படுவதற்குரிய அனுமதி யாழ் சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் அவ்வப் பகுதிகளிலுள்ள தபால் அலுவலகங்களின் மூலமும், ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் உதவி அரசாங்க அதிபர்களால் குறித்துரைக்கப்படும் இடங்களிலும் வழங்கப்படவுள்ளன. 25

## வீரமரணம்

இம்மாதம் 6ஆம் திகதி அன்று ஆனையிறவு முகாம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் சுதாகர் (இராசதுரை சுகுமார் அச்சுவேலி) வீரமரணமடைந்தார்.

## பயிர்கள் நாசம்

ஆனையிறவு தெற்குப்பகுதியில் அண்மைக்காலத்தில் குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் காலபோக நெற்பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

பரந்தன், கண்டாவளை, முரசுமோட்டை, கணேசபுரம் ஆகிய பகுதி வயல்களிலேயே நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. 10

## விவரங்களை பதிவுசெய்யவும்

வடமராட்சி இழக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த வடமராட்சிப் பகுதியின் ஏனைய இடங்களில் வசிப்போர் தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழர் புனர் வாழ்வுக்கழக வடமராட்சி வடக்கு அலுவலகம் கேட்டுள்ளது. 10

## கல்வியங்காட்டில் கடையில் திருட்டு

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள கடையொன்றின் முன் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பல பொருள்கள் நேற்று முன் தினம் இரவு களவாடப்பட்டுள்ளன.

சிகரெட் பண்டில்கள், பீடி லக்ஸ்பிறே, சம்போ, மினகாய் மூடை, சில்லைறப் பணம் போன்ற பல பொருள்களே திருட்டுப் போயுள்ளன. (41)

## அமைச்சர் கவலை

வடபகுதியில் நடைபெறும் தற்போதைய போரினால் அப்பகுதி மக்கள் அனுபவிக்கும் வேதனைகள், கஷ்டங்கள் தொடர்பாக நாம் கவலை கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் சந்திரசு பண்டா பாராளுமன்றத்தில் கூறினார்

அப்பகுதியில் உணவுத் தட்டுப்பாடு இருக்கின்றது. என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எனினும் வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை அனுப்புவதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்கிறது.

பொருள்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துகளைப் பொறுத்த வரை பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது என்று அவர் சொன்னார். 08

### வொன்னாலை...

மேற்கொள்ளப்படுகின்ற துப்பாக்கிச் சூடு, ஷெல்தாக்குதல்களினாலும் கோயிலில் பக்தர்களின் தொகை இம்முறை குறைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (18 (01)

### ஜேச்சு...

அதிகாரி ஒருவர், நவம்பரில் நடைபெறவுள்ள சார்க் மாநாடு பாதுகாப்பாக நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனையிறவுப் போரின் பின் புலிகள் போரிடும் திறனை இழந்து விட்டனர் எனவும் தெரிவித்தார்.

### தரமான...

தன என மேஜர் ரோஷன் சில்வா குறிப்பிட்டார்.

உக்கிரமான போர் நிகழ்ந்த இடம்; பழக்கமற்ற பிரதேசம் கடும் வெயில், முட்செடிகள் ஆகியன இராணுவத்திற்கு தடைகற்களாக இருந்தன எனவும் அவர் செய்தியாளரிடம் விளக்கினார்.

### ஆங்கில ஆசிரியர்...

படி இம்மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. (01, 18)

### கணித பாட...

பலர் கணித பாடங்களில் சித்தி இல்லை எனக்காரணம் காட்டப்பட்டு புறக்கணிக்கப்பட்டுவந்தனர்.

இதனால் இனி கணிதபாட சித்தி ஆங்கில ஆசிரிய தெரிவிற்கு தேவையில்லை என நேற்று அமைச்சரவையினால் ஏற்கப்பட்டது.

### ஆனையிறவு...

தாக்குதலும் தற்போது ஆனையிறவு தரைப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றமுமே படையினர் அங்கிருந்து வாபஸாவதற்கு காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை முகாமிற்கான விநியோகம் தற்போது ஆகாய வழி மூலம் நடாத்தப்படுவதாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இராணுவ அதிகாரி சரத்முனசிங்க கூறியமை குறிப்பிடத்தக்கது. 02


அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வரையுள்ளது) வட்டுக்கோட்டை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:- 01. 09. 1991 முற்பகல் 10. 00 மணிக்கு
இடம்:- சங்கானை பல நோ. கூ. சங்க மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன அஞ்சலி
2, சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
3. புதிய யாப்பு சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளல்
4. 30. 06. 91 வரையான கணக்காய்வு அறிக்கையும், 31 08. 91 வரையான கணக்கறிக்கையும் சமர்ப்பித்தல்.
5, புதிய இயக்குனர்களைத் தெரிவு செய்தல்
6. நன்றியுரை.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

செயலாளர்

08130


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 23.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.